CC No : 80/2013
பெயர் : சத்தியமூர்த்தி
த/பெ : கணேசன்
PW : 1
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of September 2025.
(A1, A2, A4 present. A3 absent. 317 Cr.P.C petition filed and allowed).
சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை
<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

23. 3 வது எதிரியால் KA03/MC-9403 என்ற வாகனத்தை மறுபதிவிற்காக எனது அலுவலகத்தில் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அ.சா.ஆ.24, பக்கம் 40 ல் கோவில்பட்டி மோட்டார் வாகன அலுவலகத்திலிருந்து எங்களால் பெங்களூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு மேற்படி வாகனம் குறித்து மறுபதிவு செய்த TN69/AZ-0299 என்ற எண் வழங்கபட்டுள்ளதாக 02.03.2010 தேதியிட்டு பெங்களூர் வட்டார போக்குவரத்து கிழக்கு அலுவலகத்திற்கு நான் அறிக்கை வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். பெங்களூர் வட்டார போக்குவரத்து அலுவலக கிழக்கிலிருந்து 26.06.2009 ல் மேற்படி வாகனம் குறித்து என்.ஓ.சி வழங்கபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

24. என்னுடைய முதல் விசாரணையில் மேற்படி வாகனத்தின் உண்மை தன்மை குறித்து போலியான கடிதம் அனுப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் உண்மை தன்மை குறித்து 04.01.2010 ஆம் தேதியன்று என்னுடைய அலுவலகத்திலிருந்து பெங்களூர் வட்டார போக்குவரத்து கிழக்கு அலுவலகத்திற்கு பதிவு தபால் மூலம் ஆய்வறிக்கை கேட்டு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான அஞ்சல் அட்டை அ.சா.ஆ.24, பக்கம் 47 என்றால் சரிதான். நீங்கள் அனுப்பிய மேற்படி அறிவிப்பிற்கு 20.01.2010 ஆம் தேதியிட்டு பெங்களூர் வட்டார போக்குவரத்து கிழக்கு அலுவலகத்திற்கு மேற்படி வாகனத்தின் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் உண்மைதான் என அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

25. 20.01.2010 தேதியிட்டு பெங்களூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுப்பட்ட உண்மை தன்மை குறித்த விவரத்தை நான் எனது 02.03.20210 தேதியிட்ட அறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனம் குறித்த ஆவணங்கள் உண்மை என்பதால்தான் நான் அதைப்பற்றி 02.03.2010 தேதியிட்ட கடிதத்தில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

26. வாகன எண். KA03 MD-2255 என்ற வாகனம் குறித்து உண்மை தன்மை கேட்டு தங்களது வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து பெங்களூர் வட்டார போக்குவரத்து மேற்கு அலுவலகத்திற்கு 14.03.2007 ல் கடிதம் (அ.சா.ஆ. 25, பக்கம் 35 ல்) அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடிதத்தில் மேற்படி வாகனத்தின் உண்மை தன்மை குறித்து 21.03.2007

தேதியிட்டு என்.ஓ.சி வழங்கபட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடிதமானது பதிவு தபாலில் அனுப்பபட்டுள்ளது. அதற்கு பதில் அறிவிப்பு 21.03.2007 ல் பெங்களூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து மேற்படி வாகனத்தின் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் உண்மை என்று பதிவு தபாலில் பதில் வரப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

27. ஜெய்சங்கர் என்ற மோட்டார் வாகன ஆய்வாளரால் அனுப்பிய தபால் மற்றும் கிடைக்கப்பெற்ற தபால் உட்பட அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்துதான் தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ஆய்வறிக்கை அனுப்பினேன் என்றால் என்னை போன்று இதே பணியில் இருந்த ஜெய்சங்கர் என்ற மோட்டார் வாகன ஆய்வாளரால் அனுப்பட்டது. 1 வது எதிரி வாகனம் சம்பந்தபட்ட விண்ணப்பத்தை எந்த தேதியில் உங்களது அலுவலகத்தில் தாக்கல் செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மற்ற எதிரிகள் எந்த தேதியில் தங்களது வாகனங்கள் குறித்து விண்ணப்பத்தை உங்களது அலுவலகத்தில் சமர்பித்தார் என்றால் விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

28. KA03 MD2255 என்ற வாகனத்திற்கு வழக்குகள் நிலுவையில் இருக்கிறதா என்று கேட்டு தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு ஜெய்சங்கர் என்ற மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைக் கேட்டதற்கு 09.02.2007 தேதியில் மேற்படி வாகனத்தின் மீது வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை என்று அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் வழக்குகள் நிலுவையில் இல்லை என்று அறிக்கைக் கொடுத்துள்ளார். 14.03.2007 ல் உண்மை தன்மை குறித்து பெங்களூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுப்பிய கடிதம் மற்றும் 21.03.2007 ல் பெங்களூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட உண்மை தன்மை சான்று, தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து 09.02.2007 ல் பெறப்பட்ட வழக்கு நிலுவையில் இல்லை என்ற சான்று ஆகிய மூன்று சான்றுகளின் அடிப்படையில்தான் வாகனத்தை மறுபதிவு செய்வதற்கு தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ஜெய்சங்கர் என்ற மோட்டார் வாகன ஆய்வாளர் பரிந்துரை செய்துள்ளார் என்றால் சரிதான்.

29. மேற்படி வாகனத்தின் படிவம் 28 மற்றும் படிவம் 29 ல் ஒவ்வொன்றிலும் இரண்டு எண்ணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி இரண்டு ஆவணங்களும் ஒன்றுதான் என்றால் சரிதான், மோட்டார் வாகன சட்டத்திற்கு உட்பட்டு படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. படிவம் 20, 19.06.2007 ல் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 01.03.2007 ம் தேதியிட்டு மேற்படி வாகனம் சாலையில் பயன்படுத்த தகுதி உடையது என தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஜெய்சங்கர் என்ற மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை வழங்கினார் என்றால் சரிதான். மேற்படி அறிக்கையில் மேற்படி வாகனத்தின் அடிச்சட்ட எண், பொறி எண் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 05.03.2007 ம் தேதி மேற்படி வாகனத்திற்கு உரிய கட்டணம் மற்றும் வரி செலுத்தபடவில்லை

என்றும், உரிமையாளரின் புகைப்படம் இணைக்கப்படவில்லை என்றும், வணிக வரி ஆட்சேபனை சான்று இல்லை என்ற காரணத்திற்காகவும் மேற்படி விண்ணப்பம் திருப்பபட்டுள்ளது என்றால் சரிதான். Notary public வழக்கறிஞரிடமிருந்து பெறப்பட்ட அபிடவிட்டில் மனுதாரரின் தந்தை பெயரோ, முகவரியோ குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

30. அ.சா.ஆ.29 ல் KA 03/MH–6078 என்ற வாகனத்தின் மனு பெறப்பட்ட தேதி 29.12.2006 என்றால் சரிதான். தூத்துக்குடி RTO அலுவலகத்திற்கு மேற்படி வாகனத்தின் Engine number, Chasis number ஆகியவற்றை குறிப்பிட்டு மேற்படி வாகனம் சாலையில் பயன்படுத்த தகுதி உடையது என 28.11.2006 ஆம் தேதியில் வாகன ஆய்வாளர் ஜெய்சங்கர் அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் வகை மாற்றம் குறித்த படிவம் ஜெய்சங்கர் என்ற மோட்டார் வாகன ஆய்வாளரிடம் பரிந்துரை செய்யப்பட்டு RTO அலுவலகம் தூத்துக்குடிக்கு 20.12.2006 தேதியில் அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு சம்மதம் தெரிவித்து தூத்துக்குடி RTO அவர்கள் 27.11.2006 அன்று செயல்முறை ஆணை பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான்.

31. மேற்படி வாகனத்தின் உண்மை தன்மை குறித்து 06.12.2006 ஆம் தேதி கோவில்பட்டி RTO அலுவலகத்திலிருந்து மேற்படி ஜெய்சங்கர் பெங்களூர் RTO அலுவலகம் மேற்கிற்கு பதிவு தபால் மூலம் அறிக்கை கேட்டு கடிதம் அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி கடிதத்தில் வாகனத்தின் Engine number, Chasis number குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடிதத்திற்கு பெங்களூர் RTO லிருந்து கோவில்பட்டி RTO விற்கு பதிவு தபாலில் 11.12.2006 தேதியிட்ட பதில் வரபட்டுள்ளது. அந்த பதிலில் மேற்படி வாகனத்தின் பதிவு, Engine number சரியாக குறிப்பிடபட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் உண்மை தன்மை மற்றும் பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் வட்டார போக்குவரத்து அலுவலகம் தூத்துக்குடிக்கு RTO அலுவலகம் கோவில்பட்டியிலிருந்து மேற்படி வாகனத்தை மறுபதிவு செய்ய பரிந்துரை கடிதம் 20.11.2006 தேதியில் அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

32. மேற்படி வாகனம் மறுபதிவு செய்த பின் அந்த விவரத்தை பெங்களூர் RTO அலுவலகத்திற்கு தெரிவிக்கவில்லை. அதனால் மேற்படி ஆவணம் சமர்பிக்கபடவில்லை. உண்மையில் மேற்படி வாகனம் குறித்து தகவல் பெங்களூர் RTO அலுவலகத்திற்கு தெரிவிக்கபட்டு அது குறித்து பதிலை இந்த வழக்கில் தாக்கல் செய்யாததற்கு காரணம் வழக்கினை பாதிக்கும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. Notary Public வழக்கறிஞரிடமிருந்து பெறப்பட்ட அபிடவிட்டில் மனுதாரரின் அப்பா பெயரோ, அவரது முகவரியோ குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமிருந்து, தூத்துக்குடி மாவட்ட RTO விற்கு 27.11.2006 தேதியில் வாகனம் KA03MH6078 என்ற வாகனத்திற்கு தூத்துக்குடி மாவட்டத்தில் எந்த வழக்கும் இல்லை என்று கடிதம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது அலுவலகத்திலிருந்து மேற்படி வாகனம் குறித்து அறிக்கை கேட்ட பிறகுதான் அறிக்கை பெறப்பட்டது என்றால் சரிதான்.

33. அ.சா.ஆ 30 வாகனம் எண் KA03/MH-4078 என்ற வாகனம் தொடர்பாக எங்கள் அலுவலகத்திற்கு விண்ணப்பித்த தேதி 03.10.2006 என்றால் சரிதான். மேற்படி வாகனம் குறித்து அடிச்சட்ட எண், பொறி எண் ஆகியவற்றை குறிப்பிட்டு மேற்படி வாகனம் சாலை போக்குவரத்திற்கு தகுதியானது என்று எங்கள் அலுவலக ஆய்வாளர் ஜெய்சங்கரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது அலுவலகத்திலிருந்து ஆய்வாளர் ஜெய்சங்கரால் மேற்படி வாகனத்தின் உண்மை தன்மை மற்றும் என்.ஓ.சி குறித்து பெங்களூர் RTO West ல் 15.09.2006 அறிக்கை கேட்டு பதிவு தபால் அனுப்பட்டடுள்ளது என்றால் சரிதான்.

34. மேற்படி கடிதத்திற்கு பெங்களூர் RTO அவர்களால் எங்களது அலுவலகத்திற்கு என்.ஓ.சி மற்றும் உண்மை தன்மை குறித்து Confirmed என 19.09.2006 தேதியிட்ட பதிவு தபாலில் அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்திலிருந்து வழக்குகள் ஏதும் இல்லை என்று 10.08.2006 ஆம் தேதி சான்று அளிக்கபட்டது. மேற்படி சான்று எங்கள் அலுவலகத்திலிருந்து கேட்டு பெறபட்டதா அல்லது மனுதாரால் சமர்பிக்கபட்டதா என்பது பற்றி கோப்புகளில் துலங்காது என்றால் சரியல்ல. மேற்படி வாகனம் குறித்து எங்கள் அலுவலகத்திலிருந்து வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது, மேற்படி ஜெய்சங்கருக்குதான் தெரியும், கோப்புகளில் வேண்டுகோள் கடிதங்கள் ஏதும் இல்லை என்பதால் அவராலும் கூறமுடியாது. நான் அவ்வாறு பொய் என்றாலும், ஜெய்சங்கரால் சொல்ல முடியும் என்றாலும் சரியல்ல. அந்த கடிதங்களை வேண்டுமென்றே மறைக்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல.

35. மேற்படி வாகனத்திற்கு மறுபதிவு எண் வழங்குவதற்கு தாக்கல் செய்யபட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து 29.09.2006 தேதியில் கோப்புகள் தூத்துக்குடி RTO விற்கு அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிக்கையை மறுபதிவு செய்யவும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். Notary Public வழக்கறிஞரிடமிருந்து பெறப்பட்ட அபிடவிட்டில் மனுதாரரின் பெயர், அப்பா பெயர், முகவரி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு வழங்கபட்ட மறுபதிவு எண் குறித்து பெங்களூர் RTO விற்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பெங்களூர் RTO விற்கு தகவல் கொடுத்துவிட்டு அதை வழக்கில் தாக்கல் செய்தால் வழக்கு பாதிக்கும் என்பதால் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

36. அ.சா.ஆ.26 ல் 2 வது எதிரி முனியசாமியால் தாக்கல் செய்யபட்டுள்ள ஆவணங்கள் குறித்தது ஆகும். அ.சா.ஆ 14 ல் 27.03.2010 தேதியிட்டு பெங்களூர் RTO முன்பு 23.07.2010 அன்று KA02 A-9306 என்று வாகனம் குறித்த Extract கேட்டு கொடுத்த வேண்டுகோள் கடிதத்திற்கு பெங்களூர் West RTO விலிருந்து 23.07.2010 அன்று பதில் பெறபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனம் 26.06.1998 ல் பதிவு செய்யபட்டுள்ளது என பதிலில்

சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு Clearance சான்று கொடுக்கப்பட்டுள்ளதாக அ.சா.ஆ.14 ல் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான், RTO KGF விற்கு 08.12.2000 ல் வழங்கபட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கு B–Extract பதிவு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அ.சா.ஆ.14 ல் இல்லை. மேற்படி ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபடவில்லை என்றால் மற்ற ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும்.

37. அ.சா.ஆ.6 வாகன எண். KA09 MD 321 என்ற வாகனத்திற்குரிய B–Extract யை வழங்கிய அலுவலரையும் கையெழுத்துக்கு கீழ் உள்ள அலுவலக முத்திரை எந்த மொழியில் உள்ளது என்று என்னால் குறிப்பிட்டு கூற முடியாது என்றால் B–Extract பற்றி கூறலாம், அலுவலக முத்திரையில் உள்ள மொழி என்ன என்று தெரியாததால் கூற முடியாது. மேற்படி வாகனத்திற்கு B–Extract நான்தான் கேட்டுள்ளேன். அந்த வேண்டுகோள் விண்ணப்பத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்திற்கு எந்த எதிரியால் எங்கள் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்யபட்டது என்றால் படிவம்20 யை பார்த்தால் தெரியும். KA09 MD 0321 மேற்படி வாகனத்திற்கு எந்த எதிரியால் எங்கள் அலுவலகத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட்டது என்ற விவரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை, மேற்படி வழக்கில் ஒன்பது கர்நாடக மாநிலத்தை சேர்ந்த பதிவெண் கொண்ட வாகனங்கள் காவல் துறையினர் மற்றும் எங்களால் தவறுதலான திருட்டு சார்ந்த வாகனங்கள் எங்கள் அலுவலகத்திற்கு பதிவெண் மாற்றி மேலும் ஒன்பது பதிவெண்கள் மாற்றபட்டு எங்கள் அலுவலகத்தில் சமர்பிக்கபட்டுள்ளதாக அறிந்தால் அதுகுறித்த ஒவ்வொரு வாகனத்தின் Extract கள் மேற்படி அலுவலகங்களில் Chasis and Engine எண் வைத்து கண்டுபிடித்த போது மொத்தமாக 18 வாகனங்கள் ஈடுபட்டு இருப்பதாக அறிந்ததால் மேற்படி 18 வாகனங்களுக்கும் தேவைப்படுகின்ற வாகனங்களுக்கும் நேரில் சென்று Extract கள் காவல் ஆய்வாளருடன் சென்று பெற்றோம். அதில் சில வாகனங்கள் உண்மை என்று சான்று அளிக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல.

38. நான் கொடுத்த புகாரில் நான்கு வாகனங்களை பற்றி மட்டும்தான் குறிப்பிட்டு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். புகாரில் 1வது எதிரி குறித்து மட்டும் உள்ளது, மற்ற எதிரிகள் பற்றி குறிப்பிடபடவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யபட்டுள்ள அனைத்து ஆவணங்களும் உண்மை நகல் என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன். அசல் ஆவணங்கள் அனைத்தும் எனது அலுவலகத்தில் உள்ளது. உண்மையில் அசல் ஆவணங்கள் எதுவும் எங்களது அலுவலகத்தில் இல்லை என்பதால்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள RTO தூத்துக்குடி, RTO பெங்களூர், தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட அசல் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்ததாக

சொல்லப்படும் அதிகாரமளிப்பு கடிதத்தின் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபடவில்லை.

39. இந்த வழக்கில் எதிரிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் உண்மையானது என்றால் சரியல்ல. அதனால்தான் இந்த வழக்கில் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும், உண்மை தன்மை தெரிந்துவிடும் என்பதாலும், நகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி வழக்கின் அசல் ஆவணங்கள் அனைத்தும் வேண்டுமென்ற மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் அசல் ஆவணங்களை தாக்கல் செய்தால் இந்த வழக்கில் சம்பந்தபட்டுள்ள அதிகாரிகளின் தவறு தெரிந்துவிடும் என்பதால் என்னால் தாக்கல் செய்யபடவில்லை என்றால் சரியல்ல, கோப்புகள் அனைத்தும் நிரந்தர கோப்புகள் என்பதால் அலுவலுகத்தில் பாதுகாக்கப்படுகிறது.

40. அசல் ஆவணங்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று அரசாணை இருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அவ்வாறு அரசாணை இருந்திருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. அந்த அரசாணையை தாக்கல் செய்வதில் எனக்கு பாதிப்பு இல்லை என்றால் சரிதான். அரசு அலுவலர் விதிப்படி பணியிடத்திலிருந்து தூரமான இடத்திற்கு செல்வதற்கு முன் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பந்தபட்ட ஆவணங்களை பெறுவதற்கு பெங்களூர் சென்றதற்கு முன் அனுமதி பெற்றதாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் முன் அனுமதி பெற்றுதான் பெங்களூருக்கு காவல் ஆய்வாளருடன் சென்று வந்தேன், அதை காவல் ஆய்வாளரிடம் தெரிவித்துள்ளேன். அது குறித்த கடிதங்கள் அலுவலகத்தில் உள்ளது. நான் அவ்வாறு பொய் என்றாலும், வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

41. இந்த வழக்கில் சம்பந்தபட்ட ஆவணங்களை இ-மெயிலில் பெறபட்டதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அது குறித்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் தொடர்பு இல்லை என்பதால்தான் என்றால் சரியல்ல. மேலும் இதுகுறித்து எங்களது அலுவலக கணினி சர்வரில் இது குறித்த ஆவணங்கள் அனைத்தும் பதிவு செய்யபட்டிருக்கும். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் பெங்களூர் RTO விற்கு ஒவ்வொரு முறை கடிதம் கொடுக்கும்போது அதற்கு தனியாக கடித எண் கொடுக்கபட்டது என்றால் சரியல்ல. பொதுவாக ஒவ்வொரு அலுவலகத்திற்கும் தேவைபடுகின்ற B-Extract குறித்த வாகனங்கள் பட்டியல் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் தனிதனியாக கொடுக்கப்பட்டது. கோப்பு எண் ஒரே எண்ணா அல்லது மாறுபட்ட எண்களா என்பதை அந்த கோப்புகளில் உள்ள வேண்டுகோள் கடிதத்தை பார்த்துதான் கூற முடியும்.

42. நான் உண்மைக்கு புறம்பாக இந்த வழக்கிலிருந்து நான் தப்பிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பெங்களூர்

RTO அலுவலகத்திற்கு நேரில் சென்றும், தொலைபேசியில் தொடர்பு கொண்டதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பல தேதிகள் முரண்பாடாக உள்ளது என்றாலும், ஒவ்வொரு வாகனத்திற்கும் இரண்டு முறை என்.ஓ.சி பெறபட்டுள்ளது என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அரசு அதிகாரிகளை காப்பாற்ற தயார் செய்யபட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

43. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் போலீசாரின் அலுவலகத்தில் தூத்துக்குடியில் வைத்தும், கோவில்பட்டி காவல் நிலையத்தில் வைத்தும் விசாரித்தார்கள், தேதி ஞாபகம் இல்லை. போலீசார் என்னை தூத்துக்குடியில் வைத்து விசாரித்தாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார்மனுவில் மூன்று வாகனங்கள் குறித்து மட்டும் பற்றிதான் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் முதல் விசாரணையில் நான் 18 வாகனங்கள் குறித்து சொல்லியுள்ளேன் என்றால் முதலில் நான் கொடுத்தது மூன்று வாகனங்கள் மட்டும்தான் போலீசார் தொடர் விசாரணை மேற்கொண்டு எங்கள் அலுவலக மறுபதிவு ஆவணங்களை ஆய்வு செய்து தொடர்ச்சியாக ஒன்பது வாகனங்கள் இதுபோன்று மறுபதிவு தவறுதலாக பதிவெண்களை மாற்றி எங்கள் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இதில் சம்பந்தபட்டுள்ள 18 வாகனங்கள் இருப்பதாக தெரிவித்துள்ளேன்.

44. போலீசாரிடம் நான்தான் 18 வாகனங்கள் விவரத்தை சொன்னேன். மேற்படி விவரங்களை இதன் தொடர்ச்சியாக காவல் துறையினர் விசாரித்தால் எந்தெந்த தேதியில் விசாரித்தார்கள், நான் சொன்னேன் என்பது சரிவர ஞாபகம் இல்லை. 27.10.2010 அன்றுதான் போலீசார் என்னை விசாரித்தாக கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் குறிப்பிடபட்டு மாதம் 7 என்று அடித்து திருத்தபட்டுள்ளது என்றால் ஆய்வாளரை விசாரித்தால்தான் தெரியும். ஆனால் அந்த கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தை நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தேதி தவிர வேறு எந்த தேதியிலும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எத்தனை நாட்கள் போலீசார் உங்களை விசாரித்தார்கள் என்றால் வழக்கு நடந்த, ஆரம்பித்த மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக வெவ்வேறு நாட்களில் எனது அலுவலகம், தூத்துக்குடி காவல் அலுவலகம், கோவில்பட்டி காவல் நிலையம் ஆகிய இடங்களில் வைத்து விசாரணை செய்தார்கள், எந்தெந்த தேதிகள் என்று 10 வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை.

45. அரசு தரப்பு ஆவணங்கள் நகல் ஆவணங்களாக இருப்பதால் அதனுடைய அசல் ஆவணங்களுடன் ஒப்பிட்டு குறியிடப்படவில்லை என்றால்

சரியல்ல. அரசு சான்று ஆவணங்களில் அசலுடன் ஒப்பிட்டு பார்த்து குறியீடு செய்யபட்டதாக குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.26 ல், படிவம் 20ல் இரண்டு பக்கங்கள் ஒன்றோடு ஒன்றாக மேலெழுந்தவாரியாக நகல் எடுக்கபட்டுள்ளது என்றால் படிவம் 20 அதன் மேல் வசூலிக்கபட்ட வரிவில்லை ஒட்டப்பட்டதாக இருக்கும், அந்த ஒட்டப்பட்ட வரி மற்றும் மறுபதிவு கட்டணங்கள் வசூலிக்கபட்ட ரசீது மற்றும் படிவங்கள் 20 ஒன்றாக வைத்து நகல் எடுத்து இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி விவரத்தை முதல் விசாரணையில் சொல்லவில்லை. படிவம் 20ல் என்னென்ன சொல்லபட்டுள்ளது என்று ஒன்றாவது பக்கத்தை பார்த்து தெரிந்து கொள்ள முடியாது என்றால் சரியல்ல. மனுதாரரின் விலாசத்திற்கும், அனுமதிக்கபட்ட தேதிக்கு இடையில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று மேற்படி படிவம் 20ல் சரியாக தெரியவில்லை என்றால் சரிதான். அதனால் படிவம்20 முழுமையான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

46. பொதுவாக மறுபதிவிற்காக என்னிடம் மனு செய்து சம்பந்தபட்ட வாகனத்தை ஒப்படைத்தால் அப்போதைய மோட்டார் வாகன ஆய்வாளர் அந்த வாகனத்தின் Chasis and Engine எண் ஆகியவற்றை நேரில் பார்த்து அதை பதிவு செய்வார் என்றால் சரிதான். அதன்பிறகு கொடுக்கப்படும் சான்று RTO விற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பபடும். அ.சா.ஆ 26 ல் சம்பந்தபட்ட வாகனம் மறுபதிவிற்காக என்னிடம் விண்ணப்பித்தபோது அதன் உண்மை தன்மை அறிய அப்போதைய பணியில் இருந்த ஆய்வாளர் சம்பந்தபட்ட RTO விற்கு என்.ஓ.சிக்காக கடிதம் எழுதியதாக துலங்கும் என்றால் சரிதான். அ.சா.ஆ 26 ல் உள்ள வாகனத்தின் பதிவு எண் KA02 A 1410 என்றால் சரிதான். 20.03.2008 ல் என்.ஓ.சிக்கு வேண்டி கோவில்பட்டியிலிருந்து பெங்களுர் East RTO விற்கு விண்ணப்பம் அனுப்பபட்டது. 28.03.2008 தேதியிட்ட என்.ஓ.சி கோவில்பட்டிக்கு அனுப்பட்டுள்ளது.

47. மேற்படி என்.ஓ.சியில் பெங்களுர் RTO அவர்களின் முத்திரையும், கையொப்பமும் உள்ளது. அ.சா.ஆ.26 ல் கர்நாடகாவில் பதிவு செய்யபட்ட பதிவு சான்று நகலும், புத்தகமும் இணைக்கபட்டுள்ளது என்றால் சரிதான். பெங்களுர் கிழக்கில் பதிவு செய்யபட்ட வாகனம் களவு போனதாகவோ அல்லது வேறு விபத்தில் சம்பந்தபட்டதாகவோ கர்நாடக மாநிலத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபட்டதாக அ.சா.ஆ.26 ன் படி துலங்காது என்றால் சரிதான், ஆனால் மேற்படி வாகனத்தில் பதிவெண்படி கர்நாடகா மாநிலத்தில் உள்ள ஆவணங்களை பார்க்கும்போது Chasis and Engine Number மற்றும் வாகன வகை மாறியுள்ளது. மேற்படி வாகனத்தின் Engine and Chasis number மற்றும் வாகனத்தின் வகை மாறியுள்ளதாக நான் எந்த அறிக்கையிலும் குறிப்பிடவில்லை என்றால் இந்த KA02 A1410 ல் கொடுக்கப்பட்ட நகல் ஆவணங்களில் மாறுபட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன்.

48. பி–பதிவேடு நகலை யார், எந்த தேதியில் தயாரித்தார்கள் என்ற விவரம் அ.சா.ஆ.3 ல் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, RTO ராஜாஜி நகர் அலுவலகத்தில் வைத்து வழங்கபட்டுள்ளது. பெங்களுர் கிழக்கு RTO விற்கும்,

பெங்களூர் ராஜாஜி நகர் RTO விற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தெரியாது. பெங்களூரில் நிறைய RTO உள்ளது. ஒவ்வொன்றிற்கும் என்னென்ன பெயரில் வைத்துள்ளார்கள் என்பதும் எனக்கு தெரியாது, நாங்கள் அங்கு சென்று விசாரித்தபோது கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஒவ்வொரு அலுவலகமாக சென்று நானும், காவல் ஆய்வாளரும் தகவல்கள் பெற்றோம். ராஜாஜி நகர் என்பது கிழக்கு RTO வா என்பதும் எனக்கு தெரியாது. அ.சா.ஆ 3 ல் வட்ட சீல் இல்லை என்றால் சரிதான் .அ.சா.ஆ.3 நானும், காவல் ஆய்வாளரும் சேர்ந்து மோசடியாக தயாரிக்கபட்டது என்றால் சரியல்ல. ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு RTO அலுவலகத்திலிருந்து பி–பதிவேடு நகல் கொடுக்கும்போது அதற்கு வட்ட முத்திரை இடப்படும் என்றால் சரிதான், வட்ட முத்திரையும் இடலாம், ARA சீல் இடலாம், இதில் ARA சீல் உள்ளது. நான் சொல்வது போல் அந்த சீல் முழுமையாக, தெளிவாக இல்லை என்றால் சரிதான், கணினியில் RTO ராஜாஜி நகர், KA02 என்று அடைப்புக்குறியில் உள்ளது, ARA என்ற முத்திரை தெரிகிறது.

49. நான் சொன்னதுபோல் கோவில்பட்டியில் கணினியில் பிரதி எடுக்கலாம் என்றால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய ராஜாஜி நகர் என்பது சீலில் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ 3 ல் உள்ள அலுவலரின் பெயர் அதில் இல்லை. அ.சா.ஆ.3 க்கும் அ.சா.ஆ.26 க்கும் எந்தவிதமாக சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.26 படி தடையில்லா சான்று பெற பெங்களூரில் இருந்து என்.ஓ.சி கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் உரிமை மாற்றம் மற்றும் மறுபதிவிற்காக ஆணையிடப்படுகிறது என்று தூத்துக்குடி RTO கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ.26 ல் உண்மை நகல் என்று நான்தான் எல்லா பக்கத்திலும் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.26 ல் உள்ள வாகனம் குறித்து நான் அ.சா.ஆ.3 யை உருவாக்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

50. அ.சா.ஆ.27 ல் உள்ள தடையில்லா சான்று பெங்களூர் கிழக்கு RTO விற்கு நான் தான் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பெங்களூர் கிழக்கு RTO விலிருந்து 01.12.2008 அன்று அனுப்பட்ட வேண்டுகோள் கடிதத்திற்கு 10.12.2008 அன்று RTO பெங்களூர் கிழக்கிலிருந்து தடையில்லா சான்று வழங்கபட்டுள்ளது. அதிலும் பெங்களூர் கிழக்கு என்று வட்ட முத்திரை இடப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தை மறுபதிவு செய்யலாம் என்று ஆணை கேட்டு 26.01.2009 அன்று நான்தான் RTO தூத்துக்குடிக்கு கோப்புகள் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான், 30.12.2008 அன்று உரிமை மாற்றத்திற்கு தூத்துக்குடி RTO உத்தரவு கொடுத்துள்ளார். அ.சா.ஆ.28 ல் உள்ள வாகனம் KA 02 A9306 என்ற கனரக வாகனத்திற்கு பி.ஜெய்சங்கர் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை1 அவர்கள் பெங்களூர் கிழக்கு RTO வில் உண்மை தன்மை கேட்டு 20.06.2008 ல் கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான்.

51. பெங்களூரு கிழக்கு RTO அலுவலகத்திலிருந்து 25.06.2008 தேதியிட்ட உண்மை தன்மை கடிதம் பெறபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த

உண்மை தன்மை கடிதத்திலும் வட்ட சீல் உள்ளது என்றால் சரிதான். 30.07.2008 தேதியில் தூத்துக்குடி RTO அவர்கள் எங்கள் கோவில்பட்டி RTO அலுவலகத்திலிருந்து அனுப்பட்ட கோப்புகளில் மறுபதிவு செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ.14 ல் சம்பந்தபட்ட வாகனம் பெங்களூர் மேற்கு RTO வில் 26.06.1998 ல் பதிவு செய்யபட்டுள்ளதாக குறிப்பிடபட்டுள்ளது. என்.ஓ.சி கேட்டு சம்பந்தபட்ட வாகனம் முதலில் பதிவு செய்த அலுவலகத்திற்கு தனித்தனியாக கடிதங்கள் எழுதப்பட வேண்டும் என்றால் சரிதான்.

52. அ.சா.ஆ 12 ல் நான்கு வாகனங்களுக்கு ஒன்றாக ஆர் எண் 7910/கே1/10, தேதி 23.07.2010 அன்று நான் அனுப்பியதாக துலங்கும் என்றால் சரியல்ல, சரியான விளக்கம் என்வென்றால் NOC என்பது வேறு, பி–பதிவேடு நகல் என்பது வேறு. எனவே மேலே கேட்கபட்ட என்.ஓ.சி சம்பந்தபட்ட விவரமும், 23.07.2010 அன்று என்னால் கேட்கபட்ட வாகனங்களின் பி–பதிவேடு நகல் என்பதும் வெவ்வேறு விதமான Subject கள் ஆகும். கோவில்பட்டி RTO அலுவலகத்திலிருந்து நான் பி–பதிவேடு நகல் கேட்டு வெளிமாநிலங்களுக்கு அனுப்பினால் எல்லாவற்றிற்கும் மேற்படி ஆர். எண் 7910/கே1/10 தான் குறிப்பிடபட்டிருக்குமா என்றால் சரியல்ல. ஒவ்வொரு பி–பதிவேடு நகலுக்கு தனிதனியான எண் கொடுக்கபட்டிருக்குமா என்றால் ஒவ்வொரு வழக்கிற்கும் வாகனத்தின் RTO அவர்கள் வேறுபட்டிருப்பின் வெவ்வேறு வழக்கிற்கு வெவ்வேறு எண் கொடுக்கபட்டிருக்கும்.

53. அ.சா.ஆ.12 ல் வட்ட சீல் இல்லை என்றால் சரிதான். பி–பதிவேடு நகல் கேட்டு விண்ணப்பித்த எந்த கடிதத்திலும் கோவில்பட்டி RTO அலுவலக வட்ட முத்திரை இடப்படவில்லை என்றால் சரிதான் .அ.சா.ஆ. 16 ல் கே.ஆர் புரா, பெங்களூர் என்று உள்ளது. அதில் ஆறு வண்டி எண்கள் எழுதப்பட்டு முதல் ஐந்து எண்கள் whitener போட்டு அடிக்கப்பட்டுள்ளது. அந்த அடித்து திருத்தபட்டத்தில் RTO வின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.16 ல் பெறுநர் முகவரியில் திருத்தம் செய்யபட்டுள்ளது. கோவில்பட்டி RTO அலுவலகத்திலிருந்து பெங்களூர் RTO கே.ஆர் புராத்தில் அனுப்பிய கடிதத்தில் கே.ஆர். புரா அலுவலகத்தின் வட்ட முத்திரை இருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். (சாட்சி தற்போது சரியல்ல என்று கூறுகிறார்). நான் நீதிமன்றத்தில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

54. அ.சா.ஆ.16 ல் பெறப்பட்டதாகவும், Receive என்று எழுதப்பட்டு கையொப்பம் செய்யபட்டதாகவும் துலங்காது. அ.சா.ஆ 16 ல் யார் பெற்றுக் கொண்டார்கள் என்ற விவரமும் அ.சா.ஆ 16 படி துலங்காது என்றால் சரிதான். அ.சா.ஆ.16 வழக்கின் தன்மைக்கேற்ப பின்னீட்டு உற்பத்தி செய்யபட்டது என்றால் சரியல்ல. அ.சா.ஆ 4 ல் RTO கே.ஆர். புரத்தின் வட்ட சீல் இல்லை என்றால் சரிதான். பெங்களூர் சிட்டி எல்கையில் எந்த இடத்திலும் கே.ஆர்.புரம் என்று பகுதி இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் கே.ஆர்.புரம் சீலை நான் மோசடியாக கோவில்பட்டியில் வைத்து உற்பத்தி செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. அதனால்தான் வட்ட சீல் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ 17, 23.07.2010 ல் நான் தயார் செய்யபட்டதாக துலங்கும் என்றால் சரிதான். அதில் உள்ள Chasis, Engine எண் எனது கையால் எழுதபட்டதின் நகல்தான் உள்ளது என்றால் சரிதான்.

55. அ.சா.ஆ 17 ல் உள்ள வாகனத்தின் எண் பின்னிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் வாகனத்தின் புளூ மையால் எழுதபட்டுள்ளது என்றால் சரிதான். அதில் வண்டி எண் Whitner போட்டு அழிக்கப்பட்டுள்ளது என்றால் வரிசை எண்1 ல் அழிக்கபட்டுள்ளது. ஒவ்வொரு அலுவலகமாக நாங்கள் சென்று விசாரிக்கும்போது பதிவெண்கள் ஒருசில அலுவலகங்களில் மாறுபட்டிருந்தால் வேண்டுகோள் கடிதம் கொடுக்கும்போது மேற்படி கேட்கபட்டிருந்த வாகனங்களின் பதிவெண்களை Whitner வைத்து அழித்துவிட்டு சரியான அவ்வலுவலகத்திற்குரிய பதிவெண்களை கேட்டு அந்த வேண்டுகோள் கடிதத்தில் பதிவு செய்து அதற்குரிய ஒப்புகையை பெற்று அதனுடைய பி–பதிவேடு பெற்று வந்தேன். நான் அ.சா.ஆ.17 யை கோவில்பட்டியில் வைத்து தயாரித்தால் அதில் திருத்தபட்டுள்ளது என்றால் சரியல்ல.

56. அ.சா.ஆ.17 ல் உள்ள கடிதத்தை RTO ஜெய் நகர், பெங்களுருக்கு அனுப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் பெங்களுரு தெற்கு RTO பெற்றுக் கொண்டதாக அதில் உள்ளது. அ.சா.ஆ.18 ல் வாகன எண் தட்டச்சு செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ 17 ல் பெங்களுர் ஜெய்நகர் RTO விற்கும், அ.சா.ஆ.18 படி RTO மைசூருக்கும் ஒரே ஆர். எண்ணில் வெவ்வேறு தேதிகளில் கடிதம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.18 ல் தேதி திருத்தபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த திருத்திற்கு சிறப்பு காரணங்கள் இல்லை. அ.சா.ஆ.18 மற்றும் 6 ல் முத்திரை கன்னடத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த சீல்லின் விரிவாக்கம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ 6 யை எந்த அதிகாரி வழங்கினார் என்று தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ 6 ல் பேக்ஸ் எண் எழுதபட்டுள்ளது. அந்த பேக்ஸ் எண் கோவில்பட்டியை சார்ந்தது. அந்த பேக்ஸை ஏன் இணைக்கவில்லை என்றால் அலுவலக கோப்புகளில் இருக்கலாம். நானாகவே உற்பத்தி செய்ததால்தான் பேக்ஸை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

57. அ.சா.ஆ.6 படி எந்த நபர் கொடுத்த விண்ணபத்தின் பேரில் பி–பதிவேடு கேட்கபட்டது என்ற விவரமும் துலங்காது என்றால் சரிதான். அ.சா.ஆ.19 ல் ஆறு வண்டிகள் தட்டச்சு செய்யபட்டு கடைசி வாகனத்தில் புளூ மையால் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் என்னுடைய சுருக்கு ஒப்பமும் இல்லை என்றால் சரிதான். எதற்காக அடிக்கப்பட்டது என்ற விவரம் அ.சா.ஆ.19 படி துலங்காது என்றால் சரிதான். பெங்களுர் RTO West என்று தட்டச்சு செய்யப்பட்டு West அடிக்கப்பட்டு East என்று மையினால் எழுதப்பட்டுள்ளது. அ.சா.ஆ.19 ல் ஒன்றாவது வாகனம் Whitener போட்டு மொத்தமாக அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதற்கு எந்த காரணமும் குறிப்பிடபடவில்லை.

58. அ.சா.ஆ.19 ல் மொத்தமாக ஒரு Engine and Chasis எண் உள்ளது. அ.சா.ஆ. 19 செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. அது என்னால் உற்பத்தி செய்யபட்டது என்றால் சரியல்ல. அதில் பெங்களூரு East RTO வின் வட்ட முத்திரை இல்லை. அ.சா.ஆ 7 வாகனம் ஆம்னி பேருந்துக்குரியது என்றால் ஆம்னி பேருந்து (தனியார் பயன்) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. KA 03 ME7948 என்ற வாகனத்தை எந்த தேதியில் என்னிடம் பெயர் மாற்றம் செய்ய மனு கொடுத்தார்கள் என்றால் மேற்படி வாகனம் கண்டுபிடிக்கபட்ட 18 எண்களுக்குரிய பதிவெண்களில் ஒன்றாக இருக்கலாம், ஆகையால் அதற்கு பி–பதிவேடு தாய் நகல் பெறபட்டது. மேற்படி வாகனம் எந்த காலத்திலும் கோவில்பட்டி RTO ல் மறுபதிவு வேண்டி விண்ணப்பம் கொடுக்கப்படவில்லை என்றும், அதனால்தான் அதற்குரிய ஆவணங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட முடியவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தின் ஆவணங்கள் இன்றும் கோவில்பட்டி RTO அலுவலகத்தில் இருந்து வருகிறதா என்றால் எனக்கு தெரியாது.

59. சம்பந்தம் இல்லாத ஆவணங்களை நானே உருவாக்கி அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.19 வரையிலான ஆவணங்களை நீதிமன்றத்தில் குறியீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் என்னால் அசல் ஆவணங்களை தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதிகளில் வழக்கின் 4 வது எதிரி அ.சா.ஆ 26, 27, 28 ஆவணங்களின் மறுபதிவிற்காக முறையாக விண்ணப்பம் செய்தார் என்றால் சரிதான். மேற்படி மூன்று ஆவணங்களுக்கும் சம்பந்தபட்ட முன்பதிவு அலுவலகம் மூலம் தடையில்லா சான்று வழங்கபட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் 4 வது எதிரியின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.